தொலைபேசி இலக்கம்.- 0112852915/ 0112821287.

(திருமதி) கே.எம்.டில்ஹானி,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நுகேகொடை அதிமேற்தரக் கிளை.

07- 658

---

**சம்பத் வங்கி**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

அனிலன ஹொட்டேல்ஸ் அன்ட் புரொப்பார்ட்டீஸ் பீஎல்சீ மற்றும் ஈஸ்ட்டன் டெவலப்மண்ட் எண்ட்டபிரைசார்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்.

கணக்கு இல.: 0029 3002 0012 (2)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2023.07.27ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.12.08 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2023.12.04 ஆந் திகதிய திவயின (Divaina), ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஐம்பத்தி ஏழு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சத்து ஏழாயிரத்து ஏழு ரூபா ஐந்து சதம் (ரூபா 577,507,007.05) 2023, யூன் 20 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முப்பத்தி ஆறு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து இருநூற்று எண்பது ரூபா (ரூபா 366,275,280.00) கட்டணத்திற்காக monthly Average Weeghted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) மேலும் பத்து கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்தி இரண்டு ரூபா அறுபத்தி இரண்டு சதம் (ரூபா 104,992,322.62) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஐந்து தசம் எட்டு வீதம் (5.8% வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1206, 3561, 3781 மற்றும் 3723 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக லொட் 16 A இன் வரைபட இல. 3380 ஐ 2025.08.07 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கும் , லொட் 182 இன் வரைபட இல. E /183/ 2012 ஐ 2025.08.07 ஆந் திகதி பி.ப. 1.45 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாம் அட்டவணை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப் பத்து பிரதேச சபை எல்லைகளுக்குள் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குள், கல்குடா கிராம அலுவலர் பிரிவிற்குள் பாசிக்குடா கிராமத்தில், பாசிக்குடாவில் அமைந்த “பாசிக்குடா ஹொலிடே ரிசோட் எனும் பாசிக்குடா எஸ்ட்டேட்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.எம். எஸ். அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூன் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 3380 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 16A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: கடல் ; கிழக்கு: தனியார் காணி ; தெற்கு: தனியார் காணி மற்றும் வீதி ; மற்றும் மேற்கு: இல. 3371 எனும் வரைபடத்தில் லொட் 15 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு ஏக்கர் (06ஏ. 00றூ. 00பே.) அல்லது இரண்டு தசம் நான்கு இரண்டு எட்டு ஒன்று ஹெக்டேயர்கள் (ஹெக். 2.4281) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3380 எனும் வரைபடத்திற்கு அமைவாக மட்டக்களப்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 244/ 34 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 1206, 3561 மற்றும் 3781 எனும் ஈட்டு முறிகளின் கீழ் மற்றும் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாம் அட்டவணை**

1. கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோரளை பத்து பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் கோரலாய் பத்து பிரதேச சபை எல்லைகளுக்குள் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் வாகரை கிராம அலுவலர் பிரிவிற்குள் பாசிக்குடா கிராமத்தில், பாசிக்குடா கடற்கரை வீதியில் அமைந்த ''கருன்சேரை'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் T. இளவரசு என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, ஏப்பிறல் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. E/ 183/ 2012 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடகிழக்கு: ஒழுங்கை பங்களா வீதி ; தென் கிழக்கு: தோட்டங்கள் முதல் கடற்கரை வரையான வீதி ; தென் மேற்கு: லொட் 2 மற்றும் வட மேற்கு: அரச காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் ஆறு பேர்ச் (01ஏ. 01றூ. 06பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. E/ 183/ 2012 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

2. மேற் கூறப்பட்ட பாசிக்குடா கிராமத்தில், பாசிக்குடா கடற்கரை வீதியில் அமைந்த கருன்சேரை'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ட. இளவரசு என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, ஏப்பிறல் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. E/ 183/ 2012 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வட கிழக்கு: லொட் 1 ; தென் கிழக்கு: தோட்டங்கள் முதல் கடற்கரை வரையான வீதி ; தென் மேற்கு: எஸ். செல்லத்துரையினது தோட்டம் ; மற்றும் வட மேற்கு: அரச காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இரண்டு பேர்ச் (00ஏ. 01றூ. 02பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. E/ 183/ 2012 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல.E/ 183/ 2012 எனும் வரைபடத்தில் கூறப்பட்ட லொட் இலக்கங்கள் 1 மற்றும் 2 மீள் அளவீடு செய்யப்பட்டு கீழே விபரிக்கப்பட்டுள்ளதோடு கீழே விபரிக்கப்பட்ட உபபிரிவாகும்.

1. மேற் கூறப்பட்ட பாசிக்குடா கிராமத்தில், பாசிக்குடா கடற்கரை வீதியில் அமைந்த ''கருன்சேரை'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. இளவரசு என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, பெப்புருவரி 13 ஆந் திகதியிடப்பட்ட இல. E/ 030/ 2011 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: ஒழுங்கை பங்களா வீதி; கிழக்கு: தோட்டங்கள் முதல் கடற்கரை வரையான வீதி; தெற்கு: லொட் 2; மற்றும் மேற்கு: அரச காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் ஆறு பேர்ச் (01ஏ. 01றூ. 06பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. E/ 030/2011 எனும் வரைபடத்திற்கு அமைவாக மட்டக்களப்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 178/ 56 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற் கூறப்பட்ட பாசிக்குடா கிராமத்தில், பாசிக்குடா கடற்கரை வீதியில் அமைந்த காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு: அரச காணி; கிழக்கு: அனிலன ஹொட்டேல் லிமிட்டெட் இற்கு சொந்தமான காணி; தெற்கு: வீதி மற்றும் மேற்கு: எஸ். செல்லத்துரைக்கு சொந்தமான அங்கமைந்த காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நாற்பத்தி இரண்டு பேர்ச் (00ஏ. 00றூ. 42பே.) மிகத் திருத்தமாக ஒரு றூட் மற்றும் இரண்டு பேர்ச் (00ஏ. 01றூ. 02பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் பரிமாணம்/ பக்கம் பு 263/ 41 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3723 எனும் ஈட்டு முறியின் கீழ் மற்றும் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

07- 668/1

---

**சம்பத் வங்கி**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

அனிகலன ஹொட்டேல்ஸ் அன்ட் புரொப்பார்ட்டீஸ் பீஎல்சீ
கணக்கு இல.: 0029 3002 0012 (1)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2023.05.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.12.08 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2023.12.04 ஆந் திகதிய திவயின (Divaina), ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை

முதலான இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் நூற்றி ஆறு கோடியே அறுபத்தி ஐந்து இலட்சத்து ஐம்பத்திமூவாயிரத்து அறுநூற்றி எண்பத்தி ஒரு ரூபா நான்பத்தி மூன்று சதம் (ரூபா 106, 65,53,681.43) 2023, யூலை 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தியாறு கோடியே அறுபத்தி ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 66,61,50,000.00) கட்டணத்திற்காக வருடாந்தம் monthly Average Weighted Prime Lending Rate + நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) மேலும் இருபது கோடியே பதின்மூன்று இலட்சத்து எண்பதாயிரத்து எண்ணூற்று பதினெட்டு ரூபா அறுபத்தேழு சதம் (ரூபா 20,13,80,818.67) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஐந்து தசம் எட்டு வீதம் (5.8%) மேலும் ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 5, 000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு நான்கு வீதம் (4%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1201, 3559 மற்றும் பின் இணைப்பு (Addendum) இலக்கங்கள் 3720,3721, 3779 மற்றும் 3978 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2025.08.07 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கட்டுகுளம் பத்து DRO பிரிவின் கட்டுக்குளம் பத்து குச்சிவேலி பிரதேச செயலாளர் பிரிவிற்குள், நிலாவெளி 241 கிராம அலுவலர் பிரிவிற்குள் நிலாவெளி கிராமத்தில் அமைந்த "மெட்வே எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் P. பரராசசேகரம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, பெப்புருவரி 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 3209 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 580 எனும் வரைபடத்தின் லொட் 1D மற்றும் ஜெட் விங் டிரவெல்ஸ் உரிமம் கோரும் காணி ( TP 181994 இன் ஒரு பகுதி); கிழக்கு : கடற்கரையினூடானஒதுக்கம் , ஃபிரெடி அல்விஸ் உரிமம் கோரும் காணி, இல. 105 எனும் வரைபடத்தின் லொட் A மற்றும் வீதி ( TP 181994 இன் ஒரு பகுதி) ; தெற்கு : ஃபிரெடி அல்விஸ் உரிமை கோரும் காணி, வீதி மற்றும் இல. 3204 எனும் வரைபடத்தின் லொட் 1 (TP 181994 இன் ஒரு பகுதி); மற்றும் மேற்கு: இல. 3204 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் இல. 461 எனும் வரைபடத்தில் லொட் 12F2 (TP 181994 இன் ஒரு பகுதி) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு ஏக்கர்கள் இரண்டு றூட் மற்றும் இருபத்தியேழு பேர்ச் ( 7ஏ. 2றூ. 27பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள். கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3209 எனும் வரைபடத்திற்கு அமைவாக திருகோணமலை காணிப்பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் H 01/ 103 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

07- 668/2

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - குருநாகல் கிளை**

**பகிரங்க ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

தர்ஷன இன்ஜினியர்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் விஜேசிங்ஹ ஆரச்சிலாகே ஜகத் தர்ஷன என்பவர் ஈட்டாளராகவும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு S.S.ஹேவாபத்திரன என்பவரினால் சகலதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.12.12 ஆந் திகதிய 2976 ஆம் இலக்க, 2015.07.08 ஆந் திகதிய 4135 ஆம் இலக்க 2011.12.12 ஆந் திகதிய 2974 ஆம் இலக்க, 2015.07.08 ஆந் திகதிய 4132 ஆம் இலக்க, 2011.12.12 ஆந் திகதிய 2975 ஆம் இலக்க , 2016.07.08 ஆந் திகதிய 4134 ஆம் இலக்க 2011.12.12 ஆந் திகதிய 2971 ஆம் இலக்க மற்றும் 2015.07.08 ஆந் திகதிய 4136 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

முதலாம் விற்பனை: 2025.07.30 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 844- கொல்விஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் உஹுமியவில் அமைந்துள்ள "கொல்விஸ்வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் H.M. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 53809 ஆம் இலக்க

2009.03.30 ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் இல. 2 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு: 15 பேர்ச்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 844- கொல்விஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் உஹுமியவில் அமைந்துள்ள ''கொல்விஸ்வத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் H.M. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 55509 ஆம் இலக்க 2009.05.11ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் இல.1 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு: 16.1 பேர்ச்.

கூறப்பட்ட 1990 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 44 என அடையாளமிடப்பட்ட பொது பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 844- கொல்விஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் உஹுமியவில் அமைந்துள்ள ''கொல்விஸ்வத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் H.M.. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 55509 ஆம் இலக்க 2009.05.11ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் இல.2 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு: 18.2 பேர்ச்.

கூறப்பட்ட 1990 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 33 என அடையாளமிடப்பட்ட பொது பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 844- கொல்விஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் உஹுமியவில் அமைந்துள்ள '' கொல்விஸ்வத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் H.M. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 55509 ஆம் இலக்க 2009.05.11ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் இல.3 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு: 18.1 பேர்ச்.

கூறப்பட்ட 1990 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 33 என அடையாளமிடப்பட்ட பொது பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 844- கொல்விஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் உஹுமியவில் அமைந்துள்ள ''கொல்விஸ்வத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் H.M. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 55509 ஆம் இலக்க 2009.05.11ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் இல.4 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு: 16.1 பேர்ச்.

கூறப்பட்ட 1990 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 44 என அடையாளமிடப்பட்ட பொது பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** குருநாகல் நகரத்திலிருந்து நீர் கொழும்பு பாதையில் சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் சென்று பிதுருவெல்ல சந்தியை கடந்தவுடன் உள்ள கொங்கிரீட் பாதைக்குப் பிரவேசித்து சுமார் 1/2 கிலோ மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 100 மீற்றர் தூரம் சென்று மீண்டும் இரண்டாம் பாதையில் வலது பக்கமாக திரும்பி சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இரண்டாம் விற்பனை: 2025.07.30ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குருநாகல் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 815- பமுனாவல கிராம அலுவலர் பிரிவில் பமுனாவல கிராமத்தில் அமைந்துள்ள ''வெவேவத்த தற்போது பானகலவத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R.M. ரத்னபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1308 ஆம் இலக்க 2000.07.27 ஆந் திகதிய வரைபடத்திற்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் R.M. ரத்னபால என்பவரினால் 2000.08.06 ஆந் திகதிய புறக்குறிப்பின் பிரகாரம் லொட் 1A என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 6.26 பேர்ச்.

மேலும் 1572 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 10 என அடையாளமிடப்பட்ட பொதுப் பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குருநாகல் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 815- பமுனாவல கிராம அலுவலர் பிரிவில் பமுனாவல கிராமத்தில் அமைந்துள்ள ''வெவேவத்த தற்போது பானகலவத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் H.M.S..ஹேரத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட

3754 ஆம் இலக்க 1994.06.11 ஆந் திகதிய வரைபடத்தில் லொட் 9H என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 10பேர்ச்.

மேலும் 1572 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 10 என அடையாளமிடப்பட்ட பொதுப் பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

**ஆதனத்தை வந்தடைதல்.-**குருநாகல் நகரத்திலிருந்து நீர்கொழும்பு பாதையில் சுமார் 3 1/2 கிலோ மீற்றர் தூரம் சென்று 4/4 ஆம் இலக்க மதகை கடந்தவுடன் உள்ள 15 அடி அகலமான பாதைக்குப் பிரவேசித்து சுமார் 15 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

மூன்றாம் விற்பனை: 2025.07.30 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 843 - உஹுமிய கிராம அலுவலர் பிரிவில் உஹுமியவில் அமைந்துள்ள ''கொல்விஸ்வத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் G.S.கலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990 ஆம் இலக்க 1996.05.13ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 25 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 01 றூட், 01பேர்ச்.

கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 23 58 மற்றும் 44 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டுகளை பாதையாக உபயோகிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்.

**ஆதனத்தை வந்தடைதல்.-**குருநாகல் நகரத்திலிருந்து நீர்கொழும்பு பாதையில் சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் சென்று பிதுருவெல்ல சந்தியை கடந்தவுடன் வலதுபக்கமாகவுள்ள மணற் பாதைக்குப் பிரவேசித்து சுமார் 1/2 கிலோமீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 200 மீற்றர் தூரம் சென்று மீண்டும் வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் பாதையின் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

நான்காம் விற்பனை: 2025.07.30 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 851-வேவெல்பொல கிராம அலுவலர் பிரிவில் ஹேனேபொல கிராமத்தில் அமைந்துள்ள ''ஹபரேகொடவத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் M. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 98/2006ஆம் இலக்க 1995.11.25 ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 9.22பேர்ச்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், விரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 851-வேவெல்பொல கிராம அலுவலர் பிரிவில் ஹேனேபொல கிராமத்தில் அமைந்துள்ள ''ஹபரேகொடவத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் M. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 520/95 ஆம் இலக்க 1995.11.25 ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 02 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 28.28பேர்ச்.

**ஆதனத்தை வந்தடைதல்.-**குருநாகல் நகரத்திலிருந்து நீர்கொழும்பு பாதையில் சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் சென்றால் இப்பிரதான பாதையில் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது. பிதுருவெல சந்தியை கடந்து சுமார் 150 மீற்றர் தூரம் வேவெல்பொல பாதையைக் கடந்தவுடன் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2023.06.02 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2023.07.10 ஆந் திகதிய ''மவ்பிம'', ''டேய்லி மிரர்'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை .-**விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% ( நூற்றுக்குப் பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2 %(நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 3000.00;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.00 .

கொள்முதலில் மிகுதி 90% மற்றும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : சிரேஷ்ட முகாமையாளர், ( வணிக கடன் அறவிடுதல்) ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல.479, டி.பி.ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இல.:011-2661835, 0112661836.

என்.யூ.ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.: 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி.
தொலைபேசி இல.: 081- 2210595, 077- 3067360, 077- 6447848.

07-674

---

## கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்

### பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

க்லெட்வின் அந்தோனி டென்சில் லூட்வைக் என்பவர் கடப்பாடுடையவராகவும்/ ஈடு வைத்தவராகவும் மற்றும் இனேஷா கௌமுடி லூட்விக் கடப்பாடுடையவராகவும் PB 4847 என்ற பதிவு இலக்கத்தைத் தாங்கி கார்கில்ஸ் வங்கி லிமிட்டட் சார்பாக பிரசித்த நொத்தாரிசு ஏ.சி. நதீஷாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2018.08.06 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 433, 435 மற்றும் 438 ஆகிய முறிகளின் மீது பெறப்பட்ட கடன் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால்,

2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் இடத்திலேயே கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்டினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோரளேயில், பள்ளே பற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் களுபோவிலவில் அமைந்துள்ள சர்ச் வீதி,15 (பகுதி), வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட மீகஹாவத்த எனும் எரகடேவத்த என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்கவினால் வரையப்பட்ட 2005, யூலை 27 ஆந் திகதியிடப்பட்ட 3495/ 9000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் Y என்ற காணி மற்றும் கட்டடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்தோடுள்ள அனைத்துடனும் அளவில் இருபத்து நான்கு தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (0ஏ.0றூ.24.70பே.) விஸ்தீரணமானது. தெல்கந்த காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் F 227/ 89 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோரளேயில், பள்ளே பற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை- கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி 537A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் களுபோவிலவில் அமைந்துள்ள சர்ச் வீதி 15 (பகுதி) வருமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட மீகஹவத்த எனும் எரகடே வத்த என்றும் தற்போது சனி சைட் என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். சி.பீ. ராஜபக்ஷவினால் வரையப்பட்ட 2005, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட 1030 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள உடனானதும் மேலானதுமான பாதையை உபயோகிக்கும் உரிமையுடன் கூடிய லொட் ஏ 4 (6 மீற்றர் அகலமான பாதைக்கான ஒதுக்கீடு) என்ற காணித்துண்டு பன்னிரண்டு தசம் ஒன்பது இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.12.92பே.) விஸ்தீரணமானது. இது தெல்கந்த பதிவு அலுவலகத்தில் M 2460/ 257 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. அத்தோடு,

மேல் மா காணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிற்றி கோரளேயில், பள்ளே பற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் கலுபோவிலவில் அமைந்துள்ள மீகஹாவத்த என்னும் எரகடேவத்த என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ராஜேந்திரவினால் வரையப்பட்ட 1965, ஒற்றோபர் 22 ஆந் திகதியிடப்பட்ட 3134 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 4 என்ற காணி ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.9பே.) விஸ்தீரணமானது. அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3134 மற்றும் இலக்கம் M 2802/177 இல் தெல்கந்த பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** கொழும்பு நகரத்திலிருந்து கொழும்பு ஹொரண வீதியினூடாக கொஹுவல வரை சென்று, இடது பக்கத்திற்குத் திரும்பி எஸ். டீ. எஸ். ஜயசிங்க ஒழுங்கை (முன்னர் சர்ச் வீதி)வரும் 200 மீற்றர் அளவு தூரம் சென்று இடதுக்கு திரும்பியவுடனேயே வரும் 'சேஜிஸ் கெம்பஸ்' வீதியில் குறிப்பிடப்பட்ட இடம் அமைந்துள்ளது. இக்குறிப்பிட்ட காணியானது, எஸ் டீ. எஸ். ஜயசிங்க ஒழுங்கையிலிருந்து வலது பக்கத்தால் சுமார் 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. ஹைலெவல் வீதி, நுகேகொடை சந்தியிலிருந்து வலது பக்கத்துக்குத் திரும்பி எஸ். டி. எஸ். ஜயசிங்க ஒழுங்கை ஊடாக சென்று 350 மீற்றர் தூரத்தில் குறிப்பிட்ட காணி தென்படும் குறிப்பிட்ட இடத்துக்கு செல்லலாம்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** 2019.10.11 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும், 2019.10.11 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-**உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5% (கொள்வனவு விலையின் (இரண்டரை வீதம்) 2 1/2 % இதற்கு மேலாக ஏற்புடைத்தான வரிகள்) ;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம்.

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து, ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையின் 10% வீத பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு: அறவிடல் தலைமையகம், கார்கில்ஸ் வங்கி லிமிட்டட், இலக்கம் 696, காலி வீதி, கொழும்பு 3. தொ.பே.இல. 011-7640450.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலை மதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252, 011- 2173282.

07- 687

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

தேசிய அபிவிருத்தி வங்கி P.L.C. பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இருவரும் பிலியந்தலையைச் சேர்ந்த மஹமரக்கலகே இஷார சுமால் ஸ்ரீயானந்த பெரேரா (முதலாம் கடனாளி) மற்றும் நாகந்தலாகே தோன நுவனி ஷர்மிளா ஞானரத்ன ( இரண்டாம் கடனாளி) ஆகியோர் கடப்பாடுடையவர்களாக பிரசித்த நொத்தாரிசு A.P.P.ஜயசோம என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.09.26 ந் திகதிய 346 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் தேசிய அபிவிருத்தி வங்கி P.L.C. வங்கி இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம்.

2025.08.15 ஆந் திகதி பி.ப. 3.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்கு/ வியாபாரத்திற்குப் பொருத்தமான சொத்து.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மொரட்டுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 558 A கடலான கிராம அலுவலர் பிரிவு, மொரட்டுமுல்லையில் அமைந்துள்ள "பெனிபன்டியவத்த எனும் கஹட்டகஹவத்த " எனும் காணி. உரிமம் பெற்ற நில அளவையாளர் G.F.W. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.09.16 ஆந்திகதிய 1264 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 17.44 பேர்ச் பரப்பளவானது.

இவ்வாதனம் தெல்கந்த காணிப்பதிவகத்தில் புத்தகப் பகுதி / இருமடி இல. D 262/ 14 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதனத்தை வந்தடைதல்.- பாணந்துறையிலிருந்து கொழும்புப் பாதையில் சுமார் 7 கிலோமீற்றர் தூரம் சென்று மொரட்டுவ மென்டிஸ் சந்தி வரை வந்து அங்கிருந்து வலதுபக்கமாகவுள்ள மென்டிஸ் மாவத்தைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 1/1/4 கிலோமீற்றர் தூரம் கடலான ஆலயம் வரை வந்து அங்கிருந்து இடதுப்பக்கமாகவுள்ள கடலான பாதைக்குப் பிரவேசித்து சுமார் 150 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (மயானத்தில் எல்லையில்)

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.- 2023.11.03ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2023.10.17ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்;" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொடுப்பனவு முறை.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 %; ( நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3000.00ரூபா ;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3000 .00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90%உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: " முகாமையாளர் - சிறுகடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2."
தொலைபேசி இல.: 011-2448448.

என்.யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி இல.: 081-2210595,077- 3067360, 077- 6447848.

07- 686

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம்ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 200 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இலக்கங்கள் : 80135662, 80300300.

இல. 1027, அவிசாவளை வீதி, கொட்டாவ. பன்னிப்பிட்டிய என்ற முகவரியில் உள்ள கஜபா சிற்றி சென்ரர் ( தனியார்) நிறுவனத்தின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

பணிப்பாளர்கள்

இல. 176A, பாலிக்கா நிவாச வீதி, ருக்மலே, பன்னிப்பிட்டிய என்ற முகவரியைச் சேர்ந்த

1. திரு. ஹினிதும வித்தரங்கலாகே ஜயரத்ன.
2. திருமதி விக்ரமசிங்கலாகே நில்மினி ஷார விக்ரமசிங்க.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.12.22 ஆந் திகதிய 2364 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.12.20 ஆந் திகதிய புதன்கிழமை டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட

அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனை திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. முதுகம்வே ஹேவாவசம் துசித் கருணாரத்ன (M/s T&H Auctions) அவர்கள் 2025.07.28 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

"சம்புத்தி இரியாகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். எஸ். ஜயலத் தயாரித்த 2017.01.03 ஆந் திகதிய 2017/ 2632 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பள்ளேபற்று, மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நகரசபை நிர்வாக எல்லைக்கட்குட்பட்ட 496B கொட்டாவ நகர கிராம அலுவலர் பிரிவில் உள்ள கொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ளது . வடக்கு: ரஞ்சித் சமரநாயக்கவின் காணியையும் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியையும்; கிழக்கு: இல. 57 மற்றும் 57/ 2, ஹைலெவல் வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம், தற்போதுள்ள பாதை மற்றும் வருண கலகெதரவால் உரிமை கோரப்படும் 17/ 2010 எனும் இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டும் 5 B என்பவற்றையும் ; தெற்கு: 6329 எனும் இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 B1 இன் ஒன்றிணைக்கப்பட்ட பகுதி , 185 எனும் இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 6, வருண கலகெதரவால் உரிமை கோரப்படும் 17/ 2010 எனும் இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள 5 B மற்றும் ஹைலெவல் வீதி என்பவற்றையும் ; மேற்கு: ரஞ்சித் சமரநாயக்க மற்றும் சி.வி. சமரநாயக்க ஆகியோரின் காணிகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மேற்கூறிய வரைபடம் இல. 2017/ 2632 இன் பிரகாரம் மூன்று றூட் முப்பத்தைந்து பேர்ச் (0ஏ.3றூ.35பே.) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப்பதிவகத்தில் C276/ 52 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பணம் செலுத்தும் முறை.-** ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

1. கொள்வனவு விலையிலிருந்து 10% ( பத்து வீதம்);
2. VAT கட்டணங்கள் ( பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ( ஒரு வீதம்);
4. ஏலதாருக்கான தரகுப் பணமாக 2.5% ( இரண்டு தசம் ஐந்து வீதம்);
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்கள்/ அறவீடுகள்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% ( பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% ( எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கான வழி:** கொட்டாவ நகரத்திலிருந்து ஹைலெவல் வீதி ஊடாக ஹோமாகமவை நோக்கி 200 மீற்றர்கள் பயணித்தால் 20/1 ஆம் மதவடியில் குறித்த ஆதனம் இருக்கக் காணலாம்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் இலங்கை வங்கியின் நுகேகொடை அதிமேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளரைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும்.

தொலைபேசி இலக்கம்.- 0112852915/ 0112821287.

(திருமதி) கே.எம்.டில்ஹானி,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நுகேகொடை அதிமேற்தரக் கிளை.

07- 659

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம்ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்ளைச் சட்டம் 22 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

நிரந்தர மேலதிக பற்று தொடர்பு இலக்கம் : 70032661, 71092942
கடன் தொடர்பு இலக்கம் : 75407061.

இல. 90/1, பமுனுவ வீதி, மஹரகம என்ற முகவரியிலுள்ள தியன மல்டி ( தனியார் ) நிறுவனத்தின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை

பணிப்பாளர்கள்

இல. 176A, பாலிக்கா நிவாச வீதி, ருக்மலே, பன்னிப்பிட்டிய என்ற முகவரியைச் சேர்ந்த

1. திரு. ஹினிதும வித்தரங்கலாகே ஜயரத்ன.
2. திருமதி விக்ரமசிங்கலாகே நில்மினி தூஷார விக்ரமசிங்க.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய ,இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.03 ஆந் திகதிய 2357 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.11.01ஆந் திகதிய புதன்கிழமை டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனை திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. முதுகம்வே ஹேவாவசம் துசித் கருணாரத்ன (M/s T&H Auctions) அவர்கள் 2025.07.28 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

" தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.எம். தாஜுதீன் தயாரித்த 20 02.01.30ஆந் திகதிய 3/ 2002 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளேபற்று, மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நகர சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட 528A தம்பஹேன கிராம அலுவலர் பிரிவில் உள்ள பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கு: காணித்துண்டுகள் 1,2,3,4 என்பவற்றையும் 14 அடிப்பாதையையும்; கிழக்கு: டபிள்யூ. அல்விஸ் சமரக்கொடி என்பவரால் உரிமை கோரப்படும் காணியையும் ; தெற்கு: வரைபட இல. 233 இல் உள்ள காணித்துண்டு 2 ஐயும் ; மேற்கு: வரைபட இல. 233 இல் உள்ள காணித்துண்டு 2 மற்றும் காணித்துண்டு 4 ( ஆனால் வரைபட இல. 233 இல் காணித்துண்டு 2 எனவும் வரைபட இல. 3/ 2002 காணித்துண்டுகள் 1,2,3,4 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது) எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மேற்கூறிய வரைபடம் இல. 3/ 2002 இன் பிரகாரம் ஆறு தசம் ஒன்பது எட்டு பேர்சு (0ஏ.0றூ.6.98பே.) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த- நுகேகொடை காணிப்பதிவகத்தில் B 178/60 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3/2002 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு 3A ஆனது வரைபட இல.2815 இல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

" தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே.பி. ஐ. அபேகோன் தயாரித்த 1995.06.12 ஆந் திகதிய 2815 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேற்கூறியவாறு பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கு: 12 அடி பாதையையும் ; கிழக்கு: டபிள்யூ. அல்விஸ் சமரக்கொடி என்பவரால் உரிமை கோரப்படும் காணியையும்;தெற்கு: காணித்துண்டு 3 இன் பாகத்தையும்; மேற்கு:காணித்துண்டு 3 இன் பாகத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஆறு தசம் ஒன்பது எட்டு பேர்ச் (0ஏ.0றூ.6.98பே.) பரப்பளவைக் கொண்டுள்ளது;

**பணம் செலுத்தும் முறை:** ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.**:**

1. கொள்வனவு விலையிலிருந்து 10% ( பத்து வீதம்);
2. VAT கட்டணங்கள் ( பொருத்தமாயின்);
3.விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ( ஒரு வீதம்);
4. ஏலதாருக்கான தரகுப் பணமாக 2.5% ( இரண்டு தசம் ஐந்து வீதம்);
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்கள்/ அறவீடுகள்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% ( பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% ( எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கான வழி:** மஹரகம நகரத்திலிருந்து பமுனுவ வீதி ஊடாக 250 மீற்றர்கள் பயணித்து பின் வலது புறமுள்ள தார் பாதையில் ( கிரம்பேக்வத்த வீதி) திரும்பி 15 மீற்றர்கள் பயணித்தால் குறித்த ஆதனம்இருக்கக் காணலாம்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் இலங்கை வங்கியின் நுகேகொடை அதிமேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளரைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும்.

தொலைபேசி இலக்கம்.- 0112852915/ 0112821287.

(திருமதி) கே.எம்.டில்ஹானி,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நுகேகொடை அதிமேற்தரக் கிளை.

07- 657

---

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ
## பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இல. 14, ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை, முகத்துவாரம், கொழும்பு 15 இல் வசிக்கும் சுந்தரம் பிரதாபன் எனும் சுந்தரம் பிரதாப்பன் ( தே.அ.அ.இல. 781380164V) என்பவர் கடப்பாடுடையவராக யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு U.D.N. சானிகா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.02.15 ஆந் திகதிய 539 ஆம் ஈட்டு முறியின் மூலம் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம்.

முதலாம் விற்பனை: 2025.08.15 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்துக்கு பொருத்தமான சொத்து, கம்பஹா மாவட்டம். ஜா- எல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 207B தென் நிவந்தகம கிராம அலுவலர் பிரிவில் நிவந்தகம கிராமத்தில் அமைந்துள்ள "தெல்கஹவத்த"எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S.D.J.I. ஜயலத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.09.14 ஆந் திகதிய 878 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 36 பேர்ச்.

இரண்டாம் விற்பனை: 2025.08.15 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்துக்கு பொருத்தமான சொத்து, கம்பஹா மாவட்டம். ஜா- எல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 207B தென் நிவந்தம கிராம அலுவலர் பிரிவில் நிவந்ம கிராமத்தில் அமைந்துள்ள "தெல்கஹவத்தி"எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S.D.J.I. ஜயலத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.09.14 ஆந் திகதிய 878 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 02 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். காணியின் பரப்பளவு 36 பேர்ச்.

மேலும் உரிமம் பெற்ற நில அளவையாளர் S.B. ஜயசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.04.30 ஆந் திகதிய 10360 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 5 என அடையாளமிடப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் 878 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 3 ( 10 அடி அகலமான பாதை ஒதுக்கீடு) மீது பாதை உரிமை உண்டு

**ஆதனத்தை வந்தடைதல்:** கந்தானை சந்தியிலிருந்து நீர்கொழும்பை நோக்கி சுமார் 2.5 கி.மீ. தூரம் சென்று வெலிகம்பிட்டிய சந்தி வரை வந்து அங்கிருந்து வலதுபக்கமாகவுள்ள ஜா-எல - கனேமுல்ல பாதைக்குப் பிரவேசித்து சுமார் 2.8 கி.மீ. தூரம் Y

சந்தி வரை வந்து புத்தர் சிலையின் அருகில் இடதுபக்கமாகத் திரும்பி சுமார் 2.3 கி.மீ. தூரம் சென்று நிவந்தம உப தபால் அலுவலகத்தைக் கடந்து வலதுபக்கமாகத் திருப்பி சுமார் 650 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாகவுள்ள பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு:*** 2023.03.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2023.03.17 ஆந் திகதிய மவ்பிம, சிலோன் டுடே மற்றும் தினக்குரல் ஆகிய தினசரி பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை:** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் வித்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்**:**

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து);
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையின் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை );
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 3,000;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.

கொள்முதலில் மிகுதி 90% மற்றும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும் , தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படாதிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**:** கடன் அறவிடுதல் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100, பெக்ஸ் : 011- 2337818.

என். யூ. ஜயசூரிய ,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி.

தொலைபேசி இலக்கங்கள் : 081- 2210595/ 077- 3067360/ 076-1375993.

07- 673

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சீ மூலம் (கல்முனை கிளை ) பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள் ) 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி ( பதிவு இலக்கம் PQ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்

**ஆதன இடாப்பு**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபை எல்லையினுள், கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவில், கல்முனை கிராமத்தில் இல. KP/ 61/ 2 கல்முனை தமிழ் கிராம அலுவலர் பிரிவில், கல்முனை, மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அஹமட் எம் முஹரூப் அவர்களால் 2007.12.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3362 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம் . (0ஏ.0றூ.14.6பே.) அல்லது 0.0370 ஹெக்டயார்.

இக்காணியில் உள்ள நிலையான கட்டடங்கள் மற்றும் அனைத்து உரிமைகள் மற்றும் அதன் மீது அமைந்துள்ள எல்லாம் சேர்த்து.

கல்முனை மட்டக்களப்பு வீதி, இல. 220 என்ற முகவரியில் வசிக்கும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை நிமலசந்திரன் கடனாளியாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி அடகு வைக்கப்பட்டுள்ள மேற்குறித்த ஆதன இடாப்பில் குறிக்கப்பட்ட காணி.

ஆதன இடாப்பு லொட் 1 : 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு மேற்குறித்த இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக:*** 2023.09.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2023.09.26 ஆந் திகதிய திவயின, த ஐலண்ட் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்:** கல்முனை கொமர்ஷல் வங்கிக் கிளையில் இருந்து அக்கரைப்பற்று வீதியூடாக 200 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது விடயமுடைய காணியை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏரதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏல தாரரின் தரகு பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.00;
(5) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(6) VAT வரி;
(7) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது கல்முனை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு**:** முகாமையாளர், கொமர்ஷல் பெங்க் ஒப் சிலோன் பிஎல்சி. இல.132, மட்டக்களப்பு வீதி, கல்முனை. தொலைபேசி இலக்கம் : 067- 2225340, பெக்ஸ் : 067- 2225343.

திரிவங்கா அன்ட் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள், மூத்த உத்தரவுபெற்ற
ஏலதாரர்கள், விலைமதிப்பீட்டாளர்கள்,
நீதிமன்ற ஆணையாளர்கள்.

இல.7/1/10, 1 ஆவது மாடி,
சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி,
பொரல்ல,கொழும்பு -08.

தொலைபேசி இலக்கம் : 011- 2396520.

07- 652

---

**செலான் வங்கி (பீ.எல்.சீ.) - வென்னப்புவ கிளை**

பெறுமதிமிக்க காணி ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

வென்னப்புவவைச் சேர்ந்த வர்ணகுலசூரிய பொருதொட்டகே நளின் பிரசான் பெர்னாண்டோ என்றழைக்கப்படும் வர்ணகுலசூரிய பொருதொட்டகே நளின் பிரசாத் பெர்னாண்டோ மற்றும் வர்ணகுலசூரிய பொருதொட்டகே மரியன் டிஸ்னா ரஞ்சனி பெர்னாண்டோ ஆகிய இருவரும் "கடப்பாட்டாளர்கள்/ ஈடுவைத்தவர்கள்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார்கள் அதனால் பிரசித்த நொத்தாரிசு வி. ப்ரீத்திகா டயஸ் என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, மே மாதம் 18 ஆந் திகதி இடப்பட்ட 3043 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2022, யூன் மாதம் 20 ஆந் திகதி இடப்பட்ட நாள் புத்தக இல. 24/ 384 இன் கீழ் தலைப்புச் சான்றிதழின் இல. 00240002279 இல் பதிவுசெய்யப்பட்ட அடமானக் கருவி மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். என். பெர்னாண்டோ என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட 2016, நவெம்பர் மாதம் 30ஆந் திகதி

இடப்பட்ட 1780, 2022, யூன் மாதம் 20 ஆந் திகதி இடப்பட்ட நாள் புத்தக இல. 24/ 386 இன் கீழ் தலைப்புச் சான்றிதழின் இல. 00240002307 இல் பதிவு செய்யப்பட்ட அடமானக் கருவி மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.எஸ். என். பெர்னாண்டோ என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட 2017, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி இடப்பட்ட 1982 மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ்.என்.பெர்னாண்டோ என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட 2018, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி இடப்பட்ட 2087 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் செலான் வங்கியில் அடகுவைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது,

2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களின் பிரகாரம் செலான் வங்கி பீஎல்சீ யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீஎல்சீ, இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.(வாடிக்கையாளர் வாகன நிறுத்துமிடத்தில்).

1 ஆவது ஏல விற்பனை -நேரம் மு.ப. 9.00 மணி

**மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவுப் பிரிவிற்குள் மற்றும் வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குள் வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவிற்குள் மற்றும் 493 ஏ கொலிஞ்சாடிய மேற்கு கிராம அலுவலர் பிரவிற்குள் கொலிஞ்சாடிய கிராமத்தில் அமைந்துள்ள சர்வேயர் ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட கடாஸ்ட்ரல் வரைபட இல. 410012 இல் சித்தரிக்கப்பட்டுள்ள தொகுதி இல. 01 இல் உள்ள காணியின் பார்சல் இல. 0133 காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் பகிரப்பட்ட காணி மற்றும் அனைத்து அசையும் மற்றும் அசையா ஆலை மற்றும் இயந்திரங்கள் இப்போது மற்றும் இங்கே சேமித்து பிறகு மற்றும் தோட்ட கட்டிடங்கள், சாதனங்கள் அல்லது கட்டுமானங்கள் அதன் மீது நிற்கும் மற்றும் ஒரு காண்டோமினியம் திட்டம் மற்றும் ஒரு காண்டோமினியம் கீழ் எந்த மற்றும் அனைத்து காண்டோமினியம் நிலம் பார்சல் அலகுகள் உட்பட ஆனால் மட்டுப்படுத்தப்பட்டவில்லை அமைக்கப்படும் பிரகடனம் அடங்கியுள்ளது மற்றும் அதன் அளவானது பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு மூன்று இரண்டு ஹெக்டயார் (0.0432 ஹெ.) அளவைக் கொண்ட மொத்த நில அளவு மற்றும் கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதன் மீது நிற்கும் மற்ற அனைத்தும் அடங்கலான விசாலமான காணி, காடாஸ்ட்ரல் வரைபட இல. 410012 இன் படி மற்றும் தலைப்புச் சான்றிதழ் இல. 00240002279 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு விப்ரீத்திகா டயஸ் என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2016, மே மாதம் 18 ஆந் திகதி இடப்பட்ட 3043 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மற்றும் 2022, யூன் மாதம் 20 ஆந் திகதி இடப்பட்ட நாள் புத்தக இல. 24/ 384 இன் கீழ் தலைப்புச் சான்றிதழ் இல. 00240002279 இல் பதிவு செய்யப்பட்ட அடமானக் கருவி இன் கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** கொழும்பு புத்தளம் வீதியில் (A3) இருந்து வென்னப்புவ சந்தி வரை சென்ற பிறகு இடது பக்கத்தில் உள்ள அசோகா வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு வலது பக்கத்தில் உள்ள வீதியில் சுமார் 70 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு கொழும்பு புத்தளம் வீதியைச் சந்திக்கும் அசோகா வீதியுடன் இணையும் இந்த விடயத்திற்கான சொத்து இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

2 ஆவது ஏல விற்பனை -நேரம் மு.ப. 9.15 மணி

**மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில் பதிவுப் பிரிவிற்குள் மற்றும் வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குள் வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவிற்குள் மற்றும் 493ஏ கொலிஞ்சாடிய மேற்கு கிராம அலுவலர் பிரவிற்குள் கொலிஞ்சடியா கிராமத்தில் அமைந்துள்ள சர்வேயர் ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட கடாஸ்ட்ரல் வரைபட இல. 410012 இல் சித்தரிக்கப்பட்டுள்ள தொகுதி இல. 01 இல் உள்ள காணியின் பார்சல் இல. 0151 காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் பகிரப்பட்ட காணி மற்றும் அனைத்து அசையும் மற்றும் அசையா ஆலை மற்றும் இயந்திரங்கள் இப்போது மற்றும் இங்கே சேமித்து பிறகு மற்றும் தோட்ட கட்டிடங்கள், சாதனங்கள் அல்லது கட்டுமானங்கள் அதன் மீது நிற்கும் மற்றும் ஒரு காண்டோமினியம் திட்டம் மற்றும் ஒரு காண்டோமினியம் கீழ் எந்த மற்றும் அனைத்து காண்டோமினியம் நிலம் பார்சல் அலகுகள் உட்பட ஆனால் மட்டுப்படுத்தப்படவில்லை அமைக்கப்படும் பிரகடனம் அடங்கியுள்ளது மற்றும் அதன் அளவானது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஆறு நான்கு ஹெக்டயார் (0.0364 ஹெ.) அளவைக் கொண்ட மொத்த நில அளவு மற்றும் கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதன் மீது நிற்கும் மற்ற அனைத்தும் அடங்கலான விசாலமான காணி, காடாஸ்ட்ரல் வரைபட இல. 410012 இன் படி மற்றும் தலைப்புச் சான்றிதழ் இல. 00240002307 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். என். பெர்னாண்டோ என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2016, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி இடப்பட்ட 1780 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மற்றும் 2022, யூன் மாதம் 20 ஆந் திகதி இடப்பட்ட நாள் புத்தக இல. 24/ 386 இன் கீழ் தலைப்புச் சான்றிதழ் இல. 00240002307 இல் பதிவு செய்யப்பட்ட அடமானக் கருவி இன் கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** கொழும்பு புத்தளம் வீதியில் இருந்து வென்னப்புவ நகரம் வரை சென்று மேலும் 700 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு இடது பக்கத்தில் உள்ள அசோகா வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு வலது பக்கத்தில் உள்ள வீதியில் சுமார் 50 மீற்றர் தூரம் வரை சென்ற பிற்கு கொழும்பு புத்தளம் வீதியைச் சந்திக்கும் அசோகா வீதியுடன் இணையும் இந்த விடயத்திற்கான சொத்து வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

3 ஆவது ஏல விற்பனை -நேரம் மு.ப. 9.30 மணி

**மேலே குறிப்பிடப்பட்ட மூன்றாவது அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவுப் பிரிவுக்குள் பிடிகல் கோறளை தெற்கின் கம்மல் பத்துவே வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளில் 492 சி உல்ஹிதியாவ மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்குள் உல்ஹிதியாவ கிராமத்தில் அமைந்துள்ள ''தல்கஹாவத்தை'' என்று அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ்.எஸ். ஏ. பெர்னாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017.07.25 ஆந் திகதி இடப்பட்ட வரைபட இலக்கம் 6118 இல் லொட் 01 என அடையாளம் இடப்பட்ட காணித்துண் பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் பகிரப்பட்ட காணியின் அளவானது முப்பத்தாறு தசம் மூன்று பேர்ச் (ஏ.0றூ. 36.3பே.) அத்துடன் கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதன் மீது நிற்கும் மற்ற அனைத்தும் அடங்கலான காணி.

பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். என். பெர்னாண்டோ என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டுமான 2018, திசெம்பர் மாதம் 03ஆந் திகதி இடப்பட்ட 2087 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி இடப்பட்ட 1982 ஆம் இலக்க ஈட்டு முறிகள் இன் கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** கொழும்பு புத்தளம் வீதியில் இருந்து வென்னப்புவ லுனுவில சந்தி வரை சென்று இடதுபுறம் புனித சேவியர் மாவத்தை வழியாக திரும்பி கடற்கரை வீதியில் உள்ள ''டி'' சந்தி வரை சுமார் 1.2 கிலோமீற்றர் வரை சென்ற பிறகு இந்த விடயத்திற்கான சொத்தின் அணுகலை அடைய முடியும். புனித சேவியர் மாவத்தை மற்றும் கடற்கரை வீதிவழியாக சட்டபூர்வ அணுகலை அனுபவிக்கும் வகையில் இந்த விடயத்திற்கான உங்கள் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** 2024.04.05ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2024.04.01 ஆந் திகதிய ''மொனரா'', ''சிலோன் டுடே '' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள்செலுத்தும் விதம் .-**உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்**:**

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;

(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3000.00;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் ரூபா 1,000.00;

(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையில் 90% வீதத்தையும் மிகுதியை இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

மேற் குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், ''பிரதான முகாமையாளர்- (சட்டம் ), செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு03.'' தொலைபேசி இலக்கங்கள்: 011-2456471, 011-2456479 .

எதுவித முன்னறிவித்தலுமின்றி மேற்படி ஏல விற்பனையை நடாத்துவதற்கும்/ இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகார முண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இல.: 071-4318252, 011- 2173282.

07-688

## நெஷனல் டிவலப்மன்ட் பாங்க் பீஎல்சீ

### பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

**காணி சம்பந்தமான விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை, பல்லே பத்துவ மாநகர சபை எல்லையினுள், இல. 44 என்ற கிருல நாகரிக பிரிவில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கிருல/ கிருலபனை கிராம அலுவலர் பிரிவில், பிரதேச வருமான பிரிவில், கிருலபனையில் அமைந்துள்ள''தலகொடுவ கார்டன்ஸ்'' வர்த்தமானி வரிமதிப்பீட்டு இல. 7 (பகுதி) என்ற ''தலகொடுவ கார்டன்ஸ்'' என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் மற்றும் மதிப்பீட்டாளர் டி.எஸ்.ஈ.விஜேசூரிய அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1549 மற்றும் 1990, ஓகத்து மாதம் 10 ஆந் திகதியுடைய அளவை வரைபடத்தில் நிருபிக்கப்பட்ட லொட் 4137 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்: 0.0230 ஹெக்டயார் அல்லது 9.09பே. விசாலமுடைய காணித்துண்டோடும்,

மேற்குறித்த காணி கீழே விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணித்துண்டின் ஊடாக மற்றும் நீடிக்கும் பாதை உரிமைகளோடும்.

1. மேற்குறித்த கிருலபனையில் அமைந்துள்ள தலகொடுவ வீதியில், வரிமதிப்பீட்டு இல. 4/94 (பகுதி) என்ற ''தலகொடுவ கார்டன்ஸ்'' என்ற பெயருடைய காணியை அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1505 என்ற அளவை வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 3952 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி (15.2 மீற்றர் அகலப்பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணிப்பகுதி) விஸ்தீரணம் 0.3185 ஹெக்டயார் அல்லது (3றூ.05.94பே.) விசாலமுடைய காணித்துண்டு.

2. மேற்குறித்த கிருலபனையில் அமைந்துள்ள தலகொடுவ வீதியில், வரிமதிப்பீட்டு இல. 4/ 94 ( பகுதி) என்ற ''தலகொடுவ கார்டன்ஸ்'' என்ற பெயருடைய காணியின் லொட் 3954 எனஅடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி ( 9.1 மீற்றர் அகலப்பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணிப்பகுதி) விஸ்தீரணம்: 0526 ஹெக்டயார் அல்லது 20.80பே. விசாலமுடைய காணித்துண்டு.

மேலும் மேற்குறித்த விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணித்துண்டு வர்த்தமானியில் உள்ள அல்லது இதன்பின் காலத்திற்குக் காலம் அல்லது நிரந்தரமாக நிலைப்படுத்தப்பட்ட எல்லா மற்றும் அனைத்து அசையா மற்றும் இயந்திர சூத்திரங் கள், உபகரணங்கள், பொருத்தப்பட்ட மற்றும் சேவைக்காக மற்றும் அத்தோடு உபகரணங்கள் உள்ளடங்கலாக மின் இணைப்புத் தொகுதி, நீர் இணைப்புத் தொகுதி உபகரணங்கள், மின் உபகரணம் மற்றும் வாயு உபகரணங்கள் அனைத்தும்.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சி.கே. விக்ரமநாயக்க அவர்களால் நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ நிறுவனம் ( வங்கி) யிற்காக, உறுதிப்படுத்தப்பட்ட இல. 2317 மற்றும் 2017.04.03 ஆந் திகதியுடைய ஈட்டு முறியின் மீது பெற்றுக் கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, கொழும்பு 05 இல் வசிக்கும் மெரெஜ்ஜகே திலீப நவிந்த பர்னாந்து, மேரெஜ்ஜகே சிறில் மேதோதியஸ் பர்னாந்து மற்றும் சுமித்ரா ஸ்ரீயாலதா பர்னாந்து ( கடன் பெறுநர்கள்) அவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும்;, மேற்குறித்த மூன்றாவது கடன்பெறுநர் அவர்களால் கீழே காண்பிக்கப்பட்ட காணி மற்றும் வளாகம், தனி அறுதி உரிமை, உரித்து மற்றும் சீவிய உரித்து, மேற்குறித்த இல. 2317 என்ற ஈட்டுமுறியின் கீழ் வங்கிக்கு அடகுவைக்கப்பட்டுள்ளதோடு,

நெஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, மேற்சொல்லப்பட்ட காணி : லொட் 4137 (0.0230 ஹெக்டயார் அல்லது 9.09பே.)

2025, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு குறித்த காணி அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்:** கிருலப்பனை தலகொட்டுவ கார்டன்ஸ், வரிமதிப்பீட்டு இல. 4/ 99E என்ற இடத்தில் காணி அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட தொகையில் 10%;

(2)மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;

(4) உள்ளூராட்சி மன்ற வரி 1%;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு செலவுகள் 100%;

(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500.00 ரூபா.

மேலதிக விபரங்களுக்கு.- மத்திய முகாமையாளர், (அறவீட்டுப் பிரிவு) நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி இல. : 011-2448448.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர் மற்றும் கொழும்பு வர்த்தக
உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கிஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 7/1/10, 1 ஆவது மாடி, சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி, பொரல்ல, கொழும்பு 08. தொலைபேசி இல. : 011-2396520.

07-626

---

## நெஷனல் டிவலப்மன்ட் பாங்க் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை விளம்பரம்

அடகு வைக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமான விபரம்

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மாலிகாதென்ன கிராம அலுவலர் பிரிவில், கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட கோரளை பிரதேச சபை நிறுவனத்தின், கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், பாதஹேவாஹெட கந்தஹய கோரளை, குருதேனிய மற்றும் கோனவத்த கிராமத்தில் அமைந்துள்ள, ஹரகம எஸ்டேட் என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக (அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எல் ஏ. த.எஸ். விஜேதுங்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1959.10.24 மற்றும் 25 ஆந் திகதியுடைய இல. 4526/ 3 என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட காணிப்பகுதியோடு உப பிரிவுகளோடு) அதிகாரம் பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1985.02.09 ஆந் திகதி மற்றும் 1987.08.05 ஆந் திகதியுடைய இல. 4526/ 3 என்ற வரைபடத்தில் லொட் இல. 3B (1றூ. 33பே.) மற்றும் லொட் 4B (12ஏ.2றூ.35பே.) என அடையாளமிடப்பட்ட பிரித்து வேறாக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட மேற்குறித்த இல. 4526/ 3 என்ற வரைபடத்தின் பிரகாரம் விஸ்தீரணம்: (13ஏ.28பே.) பிரித்துவேறாக்கப்பட்ட காணிப்பகுதி இரண்டும் மற்றும் அதன் மீது எல்லா அனைத்தும் மேற்குறித்த காணிப்பகுதி இரண்டும் (1990.10.11 ஆந் திகதி அதிகாரம் பெற்ற நில அளவையாளர் சி. பாலம்கும்புர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட மேற்குறித்த இல. 4526/ 3 என்ற வரைபடத்தில் லொட் x (லொட் இல. 4B க்காக) பாதை உரிமை மற்றும் கண்டி ஹகுரத்கெத பாதையில் பிரவேசத்தோடு) கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 308/267 இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணி பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது,

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தஹய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள ஹரகம எஸ்டேட் என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை விஜேவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்ட நிரூபிக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (13ஏ.28 பே.)

மேற்குறித்த லொட் இல. 01 என பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

2.(அ) மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, குருதேனிய வடக்கு அமைந்துள்ள ‘‘ஹுரிகொல்லஹென’’ என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக ( அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜி. ஆர். டபிள்யூ. எம். வீரகோன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1981.07.01 ஆந் திகதியுடைய இல. 374 என்ற வரைபடத்தில் லொட் இல. 1 இல் உப பிரிவுகளாக) அதிகாரம் பெற்ற நில அளவையாளர் சி. பாலம்கும்புர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1996.11.14 ஆந் திகதியுடைய இல. 3447 என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட மேற்குறித்த இல.3447 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (7.5பே.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும் . மேற்குறித்த காணி கண்டி பதிவாளர் அலுவலகத்தில் G 289/ 285 இருமடிப்புத்தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணி பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது,

மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள, ஹுரிகொல்லஹென என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை.விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் இல. 7 என அடையாளமிடப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (7.5பே.) .மேற்குறித்த லொட்

இல. 7 என வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

(ஆ) மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, குருதேனிய வடக்கில் அமைந்துள்ள ''ஹுரிகொல்லஹென'' என அறிமுகப்படுத் தப்பட்ட காணிக்காக ( அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜி. ஆர். டபிள்யூ. எம். வீரகோன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1981.07.01 ஆந் திகதியுடைய இல. 374 என்ற வரைபடத்தில் லொட் இல. 1 இல் உப பிரிவுகளாக) அதிகாரம் பெற்ற நில அளவையாளர் சி. பாலம்கும்புர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1998.10.24 ஆந் திகதியுடைய இல. 3692 என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட மேற்குறித்த இல.3692 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (2.5பே.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும் . மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 289/ 296 இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிப் பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப் பட்டுள்ளது. அதாவது,

மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள, ஹுரிகொல்லஹென என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை.விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் இல. 6 என அடையாளமிடப்பட்டு காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (2.5பே.). மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

3. மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, குருதேனிய வடக்கு அமைந்துள்ள ''குருந்துவத்த எஸ்டேட்'' என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை. விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999.08.01 ஆந் திகதியுடைய இல. 9265 என்ற வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் இல. 1 என அடையாளமிடப்பட்டு காட்டப்பட்ட மேற்குறித்த இல. 9265 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (1றூ.13.5பே.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும் . மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 372/116 இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிப் பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப் பட்டுள்ளது. அதாவது,

மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள, குருந்துவத்த எஸ்டேட் என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை.விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் இல. 4 என அடையாளமிடப்பட்டு காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் விஸ்தீரணம்: 1றூ.13.5பே.). மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

4. மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, குருதேனிய வடக்கு அமைந்துள்ள ''ஹுரிகொல்லஹென'' என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை. விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999.08.01 ஆந் திகதியுடைய இல. 9266 என்ற வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் இல. 1 என அடையாளமிடப்பட்டு காட்டப்பட்ட மேற்குறித்த இல.9266 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (9.7பே.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும். மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 372/ 117 இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிப் பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப் பட்டுள்ளது. அதாவது,

மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள, ஹுரிகொல்லஹென என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை.விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் இல. 5 என அடையாளமிடப்பட்டு காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (9.7பே.). மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

5. மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, குருதேனிய வடக்கு அமைந்துள்ள ''குருந்துவத்த எஸ்டேட்'' என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக ( அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை. விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999.08.01 ஆந் திகதியுடைய இல. 9264 என்ற வரைபடத்தில் லொட் 1 என அடையாளமிடப்பட்டு நிரூபிக்கப்பட்ட மேற்குறித்த இல. 9264 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (2றூ.6பே.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும் . மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 373/ 130 இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிப் பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப் பட்டுள்ளது. அதாவது,

மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள, ''குருந்துவத்த எஸ்டேட்'' என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி.வை.விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய

இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் இல. 3 என அடையாளமிடப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (2றூ.6பே.). மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

6.(அ) மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோளை, குருதெனியவில் அமைந்துள்ள "குருந்துவத்த எஸ்டேட்" என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. எப்.எஸ். குணசேகர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999.06.22 ஆந் திகதியுடைய இல. 305 என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 3A என அடையாளமிடப்பட்டு நிரூபிக்கப்பட்ட மேற்குறித்த இல. 305 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (1ஏ.3றூ.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும். மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 371/ 139 இருமடிப்புத்தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோளை, குருதேனியவில் அமைந்துள்ள "குருந்துவத்த எஸ்டேட்" என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.எப்.எஸ். குணசேகர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999.06.22 ஆந் திகதியுடைய இல. 305 என்ற வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்டு நிரூபிக்கப்பட்ட மேற்குறித்த இல. 305 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (2ஏ.1றூ.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும். மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 371/ 139 இருமடிப்புத்தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோளை, குருதேனியவில் அமைந்துள்ள "குருந்துவத்த எஸ்டேட்" என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. எப்.எஸ். குணசேகர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999.06.22 ஆந் திகதியுடைய இல. 305 என்ற வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2A என அடையாளமிடப்பட்டு காட்டப்பட்ட மேற்குறித்த இல. 305 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (1ஏ.3றூ.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும். மேற்குறித்த காணி கண்டி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 371/ 140 இருமடிப்புத்தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிப் பகுதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் கீழே காண்பிக்கப்பட்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது,

மேற்குறித்த மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாதஹேவாஹெட கந்தய கோரளை, கோனவத்த மற்றும் குருதேனிய கிராமத்தில் அமைந்துள்ள "குருந்துவத்த எஸ்டேட்" என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.எல்.டி. வை. விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2000.03.26 ஆந் திகதியுடைய இல. 9549 என்ற வரைபடத்தில் லொட் இல. 2 என அடையாளமிடப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (5ஏ.3றூ.) மேற்குறித்த பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும்.

உபகரணங்கள், மின் இணைப்பு, நீர் வடிகாலமைப்பு, நீர் மற்றும் ஏனைய உபகரணங்களாக நீர் இணைப்பு, மின் இணைப்பு உபகரணம், வாயு இணைப்பு உபகரணங்களாக, மேற்குறித்த முதலாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட மேற்குறித்த காணிப்பகுதி மற்றும்/ அல்லது மீதுள்ள கட்டிடங்கள் தற்பொழுது அல்லது நிலையாக பொருத்தப்பட்ட அல்லது இதன்பின் காலத்திற்குக் காலம் ஒன்றித்து பெறவேண்டிய அல்லது நிலையாக பொருத்தப்பட்டுள்ள, ஒன்றித்த மற்றும் வெவ்வேறாக எல்லா அசையா இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளதோடு,

நெஷனல் டிவலப்மன்ட் பாங்க் பீஎல்சீ நிறுவனம் ( வங்கி) க்காக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ( திரு.திருமதி ) பி.எச். என்.ஐ. செனவிரத்ன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2013.03.15 ஆந் திகதியுடைய இல. 283 என்ற ஈட்டு முறி மூலம் அடகுவைக்கப்பட்டுள்ள மற்றும் கீழே ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி மற்றும் வளாகம் பிணையாக வைக்கப்பட்டுள்ள பிரசுரிக்கப்பட்ட கடன்தொகை / வசதிகளின் மீது பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை மீள செலுத்துவதற்காக ( கடன் கொள்வனவாளர் ) இல. 362, கொழும்பு வீதி, பெபிலியான, பொரலஸ்கமுவ மற்றும் நிறுவனத்தில் தனி பதிவுசெய்யும் அலுவலகத்தில் அமைந்துள்ள பதிவுசெய்யும் இல. பீவீ 7580 என்ற மற்றும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான தயா ஏபரல் எக்ஸ்போர்ட் ( பிரைவட்) லிமிட்டெட் நிறுவனத்தின் மூலம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், அல்லது கீழே விபரிக்கப்பட்ட காணியில் மற்றும் வளாகத்தில் அறுதி உறுதியான (முன்னர் தயா கன்ஸ்டரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டெட் என அறிமுகப்படுத்தப்பட்ட) தனி பதிவு அலுவலகம் இல. 362, கொழும்பு வீதி, பெபிலியான , பொரலஸ்கமுவ என்ற இடத்தில் அமைந்துள்ள பதிவுசெய்யும் இலக்கம் பீவீ 9113 என்ற மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான ஒலிம்பஸ் கன்ஸ்டக்ரஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் கீழ் மேற்குறித்த இல. 283 என்ற ஈட்டு முறியின் கீழ் தனி அறுதி உரிமை மற்றும் சம்பந்தமாக வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளதோடும்

நெஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, மேற்சொல்லப்பட்ட காணியை லொட் இல. -1 (13ஏ.28பே.), லொட் இல.3 (2றூ.6பே.) லொட் இல. 2(5ஏ.3றூ.) 2025, ஓகத்து மாதம் 11 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்:**
கண்டி வீதியில் மஹியங்கனை வீதி ஊடாக தென்னேகும்புர சந்தி வரை 4 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது இதன்பின் திரும்பி வீதியில் வலது பக்கம் திரும்பி 4.5 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது இதன் பின் உததென்ன

வீதி அல்லது ஒலிம்பஸ் கன்ஸ்டக்ரஷன் ( பிரைவட்) லிமிட்டெட் காண்பிக்கும் வீதி இடதுபக்கம் திரும்பி 200 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது விடயமுடைய காணி வீதியின் இறுதியில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட தொகையில் 10%;

(2)மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;

(4) உள்ளூராட்சி மன்ற வரி 1%;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு செலவுகள் 100%

(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;

(7) நொத்தாரிசுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவு ரூபா 3.500.00.

மேலதிக விபரங்களுக்கு.- மத்திய முகாமையாளர், (அறவீட்டுப் பிரிவு) நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி இல. : 011-2448448.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர் மற்றும் கொழும்பு வர்த்தக
உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 1/ 7/10 1 ஆவது மாடி,
சுப்பர் மார்கட் கட்டிடத் தொகுதி,
கொழும்பு -08.

தொலைபேசி/ தொலைநகல் 011-2396520.

07-625

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது